ம் இவாகேட்ட கேள்விக்குவிடை யளித்ததில் எல்லாவற்றையு ம்சேர்த்து தாமாய் மனதிற்கு ஓர் இலக்கணங்கட்டிக் கொண் டு அதுபொருந்தாதென மறுக்கின்றார். யாமதற்குச் செய்வதி யாது? யாம்எழுதிய மனஇலக்கணம் இது ஆத்துமாவுக்கு அ கப்பொருளறியுங் கருவி என்றுதொடங்கிஉளது அதிலகப்பொ ருளென்றால் எவையென நமது நண்பர் தத்துவவிவேசினி பத் திரிகாசாரியர் கேட்டதற்கு யாம்விடையளித்து அதுவிஷயம் வி வாதமதொருவிதம் முடிந்திருக்க, "சுற்றிச்சுற்றிச்சுங்கச் சாவடி யில் வடிந்ததுபோல்,, நாம்மனவிலக்கணம் சொல்லத் தெரிய வில்லையென்று ஒப்புக்கொண்டால் பிறகு தாம்சொல்வதாகவும் யாம் ஆன்மவிலக்கணம் குறிக்கவில்லை என்றும் பலவாறு யாம் எழுதியதைமுற்றிலும் பார்க்காமலே எழுதிவருகின்றார் அவ்வித ம்சொல்லவேண்டியது அவருக்குக்காரணங்களால் சிலஅவசி யமாயிருந்தாலும் யிருக்கக்கூடும்ஆதலால், பத்திரிகாஅபிமானி களானநண்டர்களே! தாங்கள் இவ்விருபத்திரிகை களிலும் சற்று க்கவனித்துப் பார்த்து எந்தெந்த விஷயங்கள் யாம் விடையளி க்கவேண்டியவைகளோ அவைகளை எடுத்துக்காட்டுவீர்களென, தங்களுடையசனத்தை எதிர்பார்த்திருக்கிறோம். மேலும் கட வுள் என்னும்சொல்லிற்கு இதுகாறும்நிராக்ஷேபமாய் இலக் கணம் கூறினார்ஒருவருமில்லையாதலால் அச்சொல்லிற்கு எமக் கும் பொருள் தோன்றவில்லை என்றெழுதினார். இச்சொல்லி ன் பகுதி விகுதிமுதலியவற்றை எடுத்துரைப்பதல்லவோசொ ல்லிற்கிலக்கணம் அவ்விதச்சொல்லிலக் கணம் இச்சொல்லின் கண் நிராக்ஷேபமாயமைக்காது இலக்கணக்காரர்கள் விட்டா ரில்லை இலக்கணங்களை உற்றுநோக்கில் அச்சொல்லிலக்கணம் அங்கேவெளியாகும் நமது நண்பருக்குபிறரைப் பரிகசிக்குங்கா ல் "முயற்கொம்பை மழம்போடுவது,, யென்கிற விடத்திலு ள்ள முயல்கொம்பு முதலியபதங்களுக்கும் பொருளறிந்து அஞ் சாமல் விவகரிக்கத்துணிந்தும். தாம் இந்த அரியசொல் ஒன் றுக்குத்தமக்குப்பொருள் தோற்றவில்லை என்று எழுதியதற்குக் காரணம் யாதோஅறிகிலேன். பிறகு நாம்கேட்டதொன்றிரு க்க வேறொன்று கூறிவருவதும் மந்தமதிகளை மலைக்கச் செய்வ தும் கேட்டகேள்விக்கு அஞ்சிவிடைகொடுப்பதும், சொற்சா லம் காட்டுவதும், எம்மிடம் குறைவெனச்சாதுரியமாய்எடுத் துக்காட்டினார். விவேகிகளே! நமது நண்பரைப்போல் பலசபை களில் வந்துமேலான பிரசங்கங்களைச்செய்து பிராசீனநவீ ன வித்வத்சிகாமணிகளானந்திக்க கேட்டகேள்விகளுக்குகூசா மல் விடைபகர்ந்து பலபத்திரிகாசாரியர்கள் புகழப்பதம் பெ ற்றிருப்பது வேறு ஒருவர்க்குஅருமையேனும் அவ்விதமில்லாம ல் எம்போலிகள்உரைப்பதையும் தயைசெய்து நமது நண்பர்ச ற்றுக் கவனித்து ஏதோதமது சௌரவத்தையே பாராட்டித் தோன்றியபடி விடை கொடுத்து எமது வார்த்தைகளைக் கிரம மாய்ச்சீர் திருத்தித்தமது நண்பையும் உலகக்ஷேமத்தில் தமக் கிருக்கும் பெரும் விருப்பத்தையும் வெளியிடுவாரென அவர து சௌரவத்தையும் வேண்டிச்சொல்லுகிறோம். நிற்க; நம து நிருபநேசர்களுள் ஒருவரான இந்து என்பவர் நமது பத்திரி கையிலும் மித்திரன் பத்திரிகையிலும் எழுதிய "உலகம்சத்தா அசத்தா,, வென்னும் விஷயத்தைப்பற்றி ஹிதோபதேசியார்எ னக்கையொப்பமிட்டு அவரது தத்துவவிவேசினிப் பத்திரிகை யில் வெளிவந்த ஓர்நண்பருடைய வாதம் சென்ற ஜனவரி மீ வெளிவந்த ப்ரம்ம வித்தியா பத்திரிகையில்கண்ட "விடை கூ றலென்னும் விஷயத்துடன் நின்றது. ஜனவரிமீ இரண்டா ம்தேதி வெளிவந்த "தத்துவவிவேசினி,, பத்திரிகையில் "இ ந்துதத்துவப்பிரபாவம்,, என்றுமுடியும் இன்னும் வருமென் று அடியிலுள்ள ஓர் விஷயத்தைகலியுகவித்தை ,,என்னும்தலை ப்பைக்கொண்டும் ஓர் தமிழர் என்னும் கையொப்பமிட்டு க ண்டித்தநமது ஓர் நிருபநண்பர் அதின்தொடரை எதிர்பார்ப் பதுடன்இன்னும் சிலவிஷயங்களை எழுதுவதற்கு அவர்எடுத்து க்கொள்ளத்தக்க விஷயங்கள் நடுவிலெடுத்துக்கொண்டால், அ வ்வளவு உசிதமில்லை என்றெண்ணி அவற்றின் முடிவையும எ திர்பார்த்திருக்கின்றார்.

[தத்துவவிவேசினி யைக்குறித்து ஆண்டான் அடிமையென்பவ ர்எழுதியதுபின்வரும்]

மகாஜன சபையாரின் மூன்றாவது வருஷாந்தரக்கூட்டம்.

சென்னை மகா ஜன சபைக்கமிட்டியார் மேற்படி சபையி ன் ௩-வது வருஷாந்தர மகாநாடு கூடுவதை ஈஸ்டர் விடு முறை காலத்தில் ஏப்ரல்மாதம் ௲- ௰- தேதிகளில் கும்ப கோணத்தில் வைத்துக்கொள்ள உத்தேசங்கொண்டிருக்கிறா ர்கள். கிறிஸ்த்மஸ் விடுமுறைகாலத்தில் நேர்ந்திருக்க வே ண்டிய ஷை மகாநாடானது அதேகாலத்தில் கல்கத்தாவில் காங்ரெஸ்சபை கூடிய காரணத்தால் தள்ளிவைத்துக் கொள் ளப்பட்டது. மகாநாடு கூடும் பிரதிநிதிகளின் முன்ஆலோ சனைக்குக்கொண்டுவர நியமிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள எ ன்னவெனில்:—(க) காடு, உப்பு இலாகாக்களின் சட்டங்க ளால் விளையும் நலந்தீமையைப்பற்றி இன்னும் மேல்யோச னைசெய்தல்; (உ) ஜமாபந்தி நடத்தும்விதம்; [௩] புறம் போக்கு நிலங்கள் சம்பந்தமாய் சனங்களுக்குள்ள பாத்தியா பாத்தியங்கள்; [௪] தேவஸ்தான காரிய விசாரணை விஷயம் [௫] கிராமமுனிசிபுகள் ஆக்ட்டு அனுட்டானத்தால் உண் டாகும்பயன்.

மேற்குறித்த விஷயங்களில் எல்லாவற்றிலுமாவது எந்தவி ஷயங்களிலாவது தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்க ளைக்காகிதத்தில் எழுதிமகாநாட்டுக்குமுன் வாசிக்கப்படத்தக் கதாக முன்னதாகவேகாரியதரிசிகள் பெயருக்கு அனுப்பிவை ப்பீர்களானால் அது தாங்கள் கமிட்டியாருககுச்செயத ஒரு பெ ரியஉபகாரமாக விருக்கும். மேலும் இவ்விராஜதானியில்இரா ஜாங்கவிஷயமாய் ஏற்பட்டுள்ள எல்லாச்சங்கங்களும் மேற் குறித்தமுக்கியமானவிஷயங்களைப்பற்றி அந்தந்தச்சங்கத்தார் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைத்தெரிவிக்கக் கும்பகோ ணத்தில் கூடும் மகாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பும்படி மேற்குறித்த ஒவ்வொரு சங்கத்தாரையும் மகாசன சபையி ன் கமிட்டியார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்-

ப. அனந்தாசார்லு,
மூ. வீரராகவாசாரி, } ப. இரங்கய்யநாயுடு.
காரியதரிசிகள், அக்கிராசனாதிபதி

இங்ஙனம் ௬-மீ.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

பத்திரிகை கிரயம்.
இந்தியா 1-க்கு ரூ 1. 12. 0.
6 மீ 1. 0. 9.
3 மீ 0. 9. 6.
தனி 1- 0. 3. 0.

உ-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஸ்ரீ ஆனிமீ கஅ-உ க்கு கஅஅஎஸ்ரீ ஜூன்மீ ௩௰-உ வியாழக்கிழமை. { இலக்கம்—க

[illegible]

ஓர் உபநியாசம்.

[க-ம் புத்தகம் கஅ௩-ம் பக்கத்தொடர்பு]

புத்தன் பிறத்தற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே யவதரித்த ஜனகன், விசுவாமித்திரனாதியோர் சரித்திரங்க ளும் இப்புத்தன் சரித்திரமும் பெரும்பான்மை வேறுபட்டிரு ப்பினும், பிராமணர்களின் பெருமையை யொழிக்கவேண்டு மென்னுங்கருதது இம்மூவர்க்கும் பொதுவாயதேயாம். புத்த ருக்கெய்திய பிரசித்தியும் பிராமணாகள் கற்பித்த பல ஏற்பாடு களை மீறிநடந்ததனாலென்பது நிச்சயம். விசுவாமித்திரனும், ஜனகனும் பிராமணர்களின் பெருமையைத் தாமே பெற்றவர். புத்தனோ ஏழைகள் இழிகுலத்தவரி லநேகரைத் தமது சித்தா ந்தத்தைத் தெரிந்துகொள்ளுமாறு செய்துவந்தான். ஜாதி வேறுபாடானது உலகத்தாரேற்படுத்திய ஒரு கட்டுப்பாடு என் று அன்னோரா லொப்புக்சொள்ளப்பட்டது. அவற்றைக் கடக்க வேண்டுமென்பது அவருடைய உட்கருத்தன்றேயாயினும், பிரா மணர்கள் சர்வாதிகாரங்களையும் தம்வயப்படுத்தி, ஏனைய வரு ணத்தவர்பாற்காட்டிவந்தகொடுமையைச் சிறிதும் சகிக்கலாற்று தவராயினர். பின்பு பிராமணர்கள் தமது அதிகாரத்திற்கு மா றாக நேர்ந்த ஓர் கெடுதியைக் கண்ணுற்று "க்ஷத்திரியர்கள் பிற ர்க்குபதேசம்புரிதல் தவறென்றும், வேதத்திற் கூறிய தருமங் களுக்கு மாறாக இயற்றுவதால் இவர் பாபியென்றும்,, வெளியி ட்டுவந்தனர். புத்தனோ தமக்குப் பெருமையைச் சிறிதுங் கரு தாது, உலகத்தின் க்ஷேமத்தையே நாடி யாவர்க்கும் சுகமாய த தமது சித்தாந்தத்தையே வெளியிட்டுவந்தான். தான் அர சனாயிருந்தும் தனது பெருமையைச் சிறிதும் பாராட்டாது சா மானியர்களோடுங்கூடிக்கலந்து வெளியிட்டுவந்தமையால், அச் சித்தாந்தங்கள் யாவராலுமொப்பத்தக்க நிலைமையை யெய்தி ற்று. அவர் வெளியிட்ட சித்தாந்தமாவன:—"தோன்றுவன வெல்லாம் நசிக்கும்; புண்ணியமென்பது பாவத்தினும் மேம்ப ட்டது; எதுவரையில் ஒருவன் தன்னையும் தனது பொருளையுந் துறக்க முயல்வானோ அதுவரையும் கோபம், காமமாதியவற்

[illegible]

றை யெவ்வாற்ருனுமொடுக்குதல்வேண்டும்; கங்கையிற் கலந்த யமுனைமுதலிய நதிகள் மற்ற நதிகளிலொன்ருய்க் கலந்து தமது நாமரூபங்களையொழித்துப் பரமபாவனமாய் நிற்பதுபோல் பிராமணர்முதலிய நான்கு வருணத்தவரும் ததாகதனென்னும் அருகக்கடவுளினிடத்தே கலந்து ஒன்றுவர்; பிராமணர்களுக்கும் ஏனைய வருணத்தவர்க்குமுள்ள வேறுபாடுகள் பொன்னுக்கும மண்ணுக்கும், ஒளிக்கு மிருளுக்கும் உள்ள வேறுபாட்டினைப்போல் அவ்வளவு பெரிதன்று; பிராமணரேனும் சண்டாளரேனும் பெண்கள் வயிற்றிற் பிறந்தவரே; இறந்த பின் அவ்விருவர் சரீரமும் முற்றிலு மசுசியாகவே யொழியும்; இங்ஙன மிருக்கும்பொழுது இவ்விருவர்கும் வேற்றுமையென்னை? பிராமணர்கருப் புண்ணிய பாவங்களைக் கடக்க வலிமையுண்டோ? அவர் செய்த பாவம் புண்ணியமாமோ? அங்ஙனமாயின் அப் பிராமணத்தன்மை சிறந்ததேயாகும்; எல்லாப் பிராணிகளும் யாம் அன்புடன் பாராட்டத்தக்கனவே; எமது மதமோ ஆகாயத்தை நிகர்த்தது; அதில் ஸ்திரீகள், பாலர், கன்னிகைகள், தனிகர், தரித்திரர் முதலிய யாவர்க்கும் இடமுண்டு,, என்பதாதிபவாம். இன்னோரன்ன பல விடயங்களை அவ்வரச னெடுத்துரைத்தலும், அக்காலத்துப் பிராமணர்கள் புரிந்துவந்த கொடுமையிற்சிக்கி வருந்திய ஜனங்கள் இச் சௌகதசித்தாந்தத்தைக்கேட்டு அகமகிழ்வாராயினர். அதுமுதல் ஜாதியென்னும் ஓர் பெருங்கட்டு சமஸ்த சித்திகளுக்கும் தடையாயிருந்த தொழிந்தது. கழ்வா, வேடர், கூன் குருடு முடமுடையோர், கற்பிழிமாதர், தரித்திரர், யாசகர், பிணியாளர் இன்னும் பலரு மவரைச் சூழ்ந்தனர். அன்றியும், வேதங்களையோதியுணர்ந்த அநேக பிராமணர்களும் தாம் தமது அறிவின்மையை அப்புத்தமுனிவரிடத்தே ஒப்புக்கொண்டனர். அக்காலத்தில் ஆரியர்களின் கூட்டம் முன்னிருந்ததற்கு மாருகப் பற்பல வேறுபாடுகளை யெய்திற்று. அதுமுதல் இப்பரதகண்டத்திலுள்ள பல நகரங்களைச் சூத்திரவமிசத்திற் பிறந்த சிலர் கைக்கொண்டு ஆண்டு அரசராயினர். அவர்களுக்கு பயோகமாயுள்ள பாலி, பிராகிருதம் முதலிய பலவித பாஷைகள் வழங்கிவரச் சிறிதுசிறிதாகச் சம்ஸ்கிருதபாஷை குன்றியது. சைத்தியமெனப் பெயர்வாய்ந்த சில கட்டங்களு மித்தேசத்தி லேற்பட்டன. அம்மதத்தில் அநேகர் பிரவேசித்தனர். இப் புத்தமதம் இத்தேசத்திலிருந்த கால மிம்மட்டெனக் குறித்துரைக்க வியலாதாயின. சுமார் 1500-வருட காலத்திற்கு முன் இத்தேசத்தையடைந்த பாகியன் என்னும் ஓர் சீனதேசத்தான் அக்காலத்திற்ருன் பிராமணர்களினதிகாரம் மீண்டு முயிர்த்தெழுந்துவருங் குறிகளைக் கண்டதாய் எழுதியிருக்கின்ருன். அதிற்கு 200. வருடங்களுக்குப் பின்பு வந்த மற்ருெருவன் அக்காலத்திலே இந்துதேசத்திற் புத்தமதம் வெகு அபாயகரமான நிலைமையிலிருந்ததாக எழுதியிருக்கின்ருன் பிராமணர்களின் முற்காலத்திலுள்ள மேம்பாடுகள் மீண்டும் நிலைபெற்றன. அக்காலத்துத் திருவவதாரஞ்செய்தருளிய ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியசுவாமிகளவர்கள் அத்வைதசித்தாந்தத்தை ஸ்தாபிக்கக்கருதிப் பௌத்தமதசித்தாந்தத்தை வேருடன்களைந்தெறிந்து, இந்துக்களின் ஆசாரங்களை முன்போல் நடாத்திவருமாறு புரிவித்தார்.

வரும்.

மொழிபெயர்ப்பு.

ப்ரஹ்மவித்யா.

கீர்வாணபாஷா

ப்ரதமபுஸ்தகே (கக) பஞ்சதசோऽத்யாய꞉

இதிஹாஸ꞉

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஸமஸ்கிருதபாஷை.

இதிகாசம்.

[௪-ம் புத்தகம் ௪அ-ம் பக்கத்தொடர்ச்சி]

அங்ஙனமே மகாபாரதம் இப்பரதகண்டத்தில் வழங்கும் பலவகை நூல்களின் சாரமடங்கியதென்று பெரியோர் அருளிய திருவாக்கிலையமுற்ற சிலவற்றை நோக்கி அவற்றின் விஷயங்களை இங்கே எடுத்துக்காட்டுவாம். ஜயம் என்னும் பதம் ௧அ. என்னும் எண்ணைக் குறிக்குமென்று முன்பு எடுத்து விளக்கினேமன்ருே? அதுபற்றியே இப்பாரதத்தின் பருவங்களிலும், இதன் சாரமாகிய ஸ்ரீபகவற்கீதையின் அத்தியாயங்களிலும், அதற்கு மூலமாய புராணங்களிலும் அதே தொகை உள்ளதென்றறிக. பாரதத்திற் பதினெண் பருவங்களுள்ளதென்பது எல்லோரும் அறிந்ததேயாம். இதன் உபபருவங்கள் நூற்றுக்கு மேற்படும். ஆயினும், இக்காலத்திற் காலவேறுபாட்டானும, தேசவேறுபாட்டானும், பிரதிகளின் வேறுபாட்டானும் புஸ்தகங்கள் பலவகைப்பட்டிருப்பினும், நடுவுநிலைமையுள்ள ஒருவர் ஆராய்ந்துபார்ப்பரேல் சுத்தமான புஸ்தகங்களும் அகப்படுமென்பதற் கையமில்லை. இப்பொழுதும் தென்னுட்டில் பல கிரகங்களில் இப்பாரதபுஸ்தகத்தைப் பூஜித்துவருவதைப் பார்க்கலாம். தென்னுட்டிற் பிறந்து வடநாடுகளிற் குடியேறிய பல வித்துவசிகாமணிகளைத் தம்மதத்தினராக்கிய நாவலிமைபெற்று நாஸ்திகத்தை வேரறுத்த பெரும்புகழெய்திய ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியசுவாமிகள், ஸ்ரீமது ஆனந்ததீர்த்தசுவாமிகள் முதலிய ஆசாரியர்களும், அவரது திருமரபிலவதரித்த ஏனைய மதாசாரியர்களும் எடுத்துக்காட்டிய பல வசனங்கள் இப்பாரதத்தின்கண்ணுள்ளனவேயாம். அதுகொண்டே இப்புஸ்தகம மதவைஷ்கிருதராலும், ஓர் மதத்தில் அதிகப்பற்றுள்ள பிறராலும் ஒருவழியினுங் கெடுக்கப்படவில்லையென்று நமபுதற்கிடனுயிருக்கின்றது. இத் தென்னுட்டிலுள்ள புஸ்தகங்களில் இலக்ஷம் சுலோகங்கள் [அதாவது ௩௨. எழுத்துக்கொண்டது ஓர் கிரந்தமெனப்படும்] இருக்கக் காண்கினறேம். மற்றைத் தேசங்களிலுள்ள புஸ்தகங்களிலோ சுமார் அறுபது அல்லது எழுபதினுயிரம் சுலோகங்கள் காணப்படுகின்றன. அதுகொண்டே அப்புஸ்தகங்கள் மததுரபிமானிகளின் கையிலகப்பட்டதாக எண்ணுகின்றேம். யாமுரைத்த சுத்தப்பிரதியும் கூடிய சீக்கிரத்தில் அச்சிடப்படுமென எதிர்பார்க்கின்றேம். இதில் அறிந்துகொள்ளற்பாலனவாய விஷயங்கள் பின் வருமாறு காண்க:

ஆஸ்திகபருவத்தால், குலத்திற்குப் பெரும் புகழை விளைவிக்கும் புதல்வனே புதல்வனெனறும், ஜனமேஜய சர்ப்பயாகப் படலத்தால் பெற்றேர்க்குப் புதல்வர் இயற்றவேண்டிய கடமைகளும், யயாதியென்னும் படலத்தால் யௌவனத்தின் கொடுமை, புத்திரர்களின் கடமை, மாதர்களின் கடமை முதலாயினவும், அரக்குமாளிகைப்படல முதலியவற்ருல் தீயோரினியல்கையும, ஆபத்துக்கு அறமே துணையாமென்பதும், சுபத்திரையை மணம்புரிந்த படலத்தால் காமுகர்களினியல்பும், இராஜசூயபர்வத்தால் சர்வ வைபவங்களும் அறத்தானன்றியமையாவெனவும், சிசுபாலன்வதைப்படலத்தால் ஈஸ்வரனிடத்தில் செய்த அபராதத்தின் பயனும், முற்சூதாடியபடலம் பிற்சூதாடிய படலங்களால் தீய செய்கையின் பயனும், சகோதரர்களுக்

[illegible]

குரிய ஒற்றுமையும், பெண்கள் புரியும் பரமேசுரபக்தியின் கோரமும், கைராதபர்வத்தால் பரமேசுரபக்தியின் பெருமையும், தீர்த்தயாத்திரைப் படலத்தால் அநேக தீர்த்தங்களின் விசேடமும், யக்ஷப்பிரசனப்படலத்தால் அநேக தருமங்களினுண்மையும், அஜகரப்படலத்தால் கோபத்தின் கெடுதலான பயனும், கோஷயாத்திராபர்வத்தால் ஒற்றுமையின் பிரயோசனமும், சுவர்க்கலோகாபிகமனபர்வத்தினுல் ஜோதிர்மண்டலங்களினுடைய இருப்பும், மார்க்கண்டேயசமஸ்யாபர்வத்தினுல் பலவிதமான தேசாசாரங்களும், வைத்தியமுதலிய சாஸ்திரங்களின் பெருமையும், கலிகாலத்தின் மகிமை முதலானவையும், ஜயத்திரதமோட்சபருவத்தினுல் பகைமையையுடைய சுற்றத்தாரிடத்திலொருக்கால் கருணையும், இராமோபாக்கியானபர்வத்தால் சற்குணமுள்ள புருடரின் இலக்கணமும், பதிவிரதாமான்மியபர்வத்தினுல் பதிவிரதைகளின் பெருமையும், ஸ்திரீகளுடைய தர்மமும், விராடபருவத்தினுல் இராஜநீதியும், சேனுேதயோகபர்வத்தால் சேனைகளைச்சேர்க்கும் தன்மையும், அச்சேனைகளைப் பரிபாலிக்கும் வகையும், விதுரஜாகரபர்வத்தால் சில இராஜநீதிகளும், வருணச்சிரமதருமங்களின் சங்கிரகமும், சனத்சுஜாதீய பர்வத்தினுல் பெருமைதாங்கிய யோகத்தினுண்மையும், மகத்தான அறிவும், அம்போபாக்கியானபர்வத்தால் மங்கையர்களுடைய நீடித்த வைரத்தையும், சூரனது காரியத்தையும், பகவத்கீதா பர்வத்தினுல் தத்துவங்களனைத்தையும், யுத்தபஞ்சகத்தால் பலவிதமான யுத்தங்களின் ரகசியமும், பத்மவியூகம் முதலிய நிர்ணயமும், சத்துருக்களை ஜயிக்கும் உபாயமும், சூரர்களுடைய சுவபாவம் முதலியனவும், சௌப்திகபருவத்தால் கோபக்குருடனுன மனிதனுக்கு அதர்மத்திலும் பிரவர்த்தி உண்டென்பதும், ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு அடியார்களிடத்தில் பக்ஷமுண்டென்பதும், அப்படியே ராஜதர்மம், ஆபத்தர்மம், மோக்ஷதர்மம் என்கிற மூன்று பருவங்களால் அந்தந்தப் பெயர்களுக்கு அனுகூலமான அந்தந்தத் தர்மங்களும், ஆநுசாஸிகப் பருவத்தாற் சாம்மியம் முதலிய சகல தர்மங்களும், யாவராலுமறியக் கூடாத பரமேசுரனது பெரும் வைபவமும், ஆஸ்வமேதிகப்பருவத்தாற் கர்மங்களுடைய ஸ்வரூபமும், அநுகீதாபருவத்தால் தொண்டர்களிடம் பகவானுக்குள்ள பக்ஷமும், மிகவியக்கத் தக்கதான சந்தர்ப்ப உண்மைகளுடைய விசேஷமும், பிறகு ஆஸ்ரமவாஸம் முதலியதால் துறவியின் ஆஸ்ரமதர்மங்களும், சாந்தியின் ஸ்வரூபமும்வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விதப் பலவிதமான தத்துவங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பாரதத்தாற் பெரியோர்களுடைய பலவிதமான சரித்திரமும், உபஜீவிக்கத்தக்க பலவிதமான கவிகளுடைய சம்பிரதாயமும், நூலாசிரியர்களுடைய பல ரகசியமும், யுக்தியை அறிந்தவர்களுடைய புத்திவிசேஷமும், வேறு நூல்களுடைய அபேக்ஷையின்றி அறியக் கூடும். இப்பாரதத்தின் பலத்தாலேதான் நமது பெரியோர்களால் நன்றாய்க் காக்கப்பட்டாத புராணஸ்கந்தமானது முற்றிலும் கிடைப்பது வெகு அரிதாயிற்று. ஆனது பற்றியேதான் ([illegible]) "பாரதத்தை அப்பியசித்தமாத்திரத்தில் கஅ- புராணங்களையும் படிப்பதினுலுண்டான பலனை அடைவா,, னென்று கூறப்பட்டிருக்கின்றது. இம்மகாபாரதமானது ஸ்ரீமதவாத

[illegible]

ராயணமுனிவர்பெருமானு லியற்றப்பட்டமையினுலே இப்பாரதகண்டத்திற் பிறந்த ஒவ்வொரு மதஸ்தரும கொண்டாடுந் தகைமைபெற்றதாம். "இராமாயணமும் பாரதமும் முறையே ஆதிகாவியமும் இதிகாசமுமாம்,, என்பதனுற் பாரதம் இதிகாசமென வழங்கப்பட்டமை காண்க. இராமாயணம் இதிகாசமேயாயினும் அதனை அந்தப்பதத்தாற் கூறாது ஆதிகாவியம் என்று கூறுவதே வழக்கமாயிற்று. அது ஆதிகவியாகிய ஸ்ரீமத்வான்மீக மகாருஷியினுலே இயற்றப்பட்டது- காவிய லக்ஷணங்களியாவற்றிற்கும் மூலமாய இலக்கியமாம். இக்காலத்தவருட்சிலர் (அதாவது மேற்றிசையிற் பிறந்த ஆங்கிலேய ஜர்மானியர்கள்) தமது மதத்திற்கியையுமாறு எவற்றினையும் சேர்க்க வேண்டுமென்னும் ஓர் அபிமானத்தால் ஸ்ரீராமாயணமானது மாபாரதத்திற்குப் பின்னரே எழுதப்பட்டதென்று ஊகிக்கின்றூர்கள். அதுவிஷயத்திற் பலகாரணங்களையுங் காட்டிவருகின்றூர்கள். அவைகள் காரணப் போலிகளாமே யன்றிக் காரணங்களாகா. அவர் கூறுங் காரணங்களாவன:— "இவ்வுலகத்தினியல்பு காலஞ்செல்லச் செல்ல நாகரிகம் விருத்தியாகின்றதென்பது யாவர்க்குந் தெரிந்ததேயாம்; ஆராய்ந்துபார்க்குமிடத்து ஸ்ரீஇராமாயணம் செய்தகாலத்திலே ஜனங்கள் மிக நாகரீகம்பெற்றிருப்பதாயும், பாரதஞ் செய்த காலத்திலோ அப்படிக்கில்லை யென்றும் தெரிகின்றது. என்னெனில், இராமாயணத்திலே அயோத்திமாநகரை வர்ணிக்குங் காலத்து, அநேகவித கல்விப் பயிற்சி, பலவித இராஜநீதி, அவற்றின் பெருமை முதலியன நன்றாக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. தொடக்கத்திற்றானே "கோஸலமென்னும் ராச்சியத்திலே உலகெலாம் புகழ் பெற்ற அயோத்தி யென்னும் ஓர் நகரம் உண்டு. அது பன்னிரண்டு யோஜனை நீளமும், மூன்று யோஜனை அகலமும் உள்ளது. அந்நகரத்தின் கண்ணே மிக விசாலம் பொருந்திப் பத்தி பத்தியாய் கிரைக்கப்பட்டுத் தினந்தோறும் ஜலந்தெளித்துப் புஷ்பங்களா லலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகள் நிறைந்த பெரிய இராஜவீதிகளுண்டு,, என்று தொடங்கி "அதைத்தசரதனென்னும் அரசன் ஆண்டுவந்தான்,, என்றுரைத்துப், பின்னரும் அந்நகரத்தின்சிறப்பினைப் பலவாறு எழுதப்பட்டிருக்கின்றது. மிகப்பெரிதாகிய கதவுகளையுடைய கோட்டைவாயில்களும் வரிசை வரிசையாகவுள்ள கடைவீதிகளும் அந்நகரத்தின்கண்ணே உண்டு. அநேக யந்திரங்களும், பற்பல ஆயுதங்களும், பல கைத்தொழிலாளர்களும், அந்நகரைச்சுற்றிய பெரிய மதில்களும், பலவகைப்பட்ட கொடிகளும், சதந்நீயென்னும் ஓர்வகை யுத்தக்கருவிகளும், (☞ இதனைத் தற்காலம் பீரங்கியென வழங்கும் யுத்தக்கருவியாக நிச்சயிக்க வேண்டியிருக்கின்றது. இது கோட்டைக்கட்டிடங்களில் ஏற்றப்பட்டிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கின்றது) பல நடனமங்கையர்கூட்டங்களும் அங்கேயிருந்தன. அன்றியும், பலவிதமான சோலைகளும், உத்தியாவனங்களும், மிகப்பெரிதாகிய அகழிகளும், பலமுள்ள துர்க்கங்களும் இருத்தலினுலே வேறு சத்துருக்கள் உள்ளே புகுந்துகொள்ள இடங்கிடையாது. யானைகள், குதிரைகள், மாடுகள், ஒட்டைகள், கோவேறுகழுதைகள் முதலாயினவும் அங்கே மிகவுண்டு,, என்றும், "பலதேசங்களினின்றுவந்து வர்த்தகஞ்செய்யும் வர்த்தகர்கள் அநேகர் அங்கு வசிக்கின்றூர்கள்,, என்றும், சமமானபூமியில் அமைக்கப்பட்டிருக்கின்றது,, என்றும், "நாத்திகர், பொய்சொல்வோர்,

[illegible]

——):o:⊂:o:(——

[illegible]

பெரியோரிடம் வணங்கிப் பலஉண்மைகளைக் கேட்டறியாதவர், பிறருடைய மேன்மையைக் கண்டு அழுக்காறெய்துவோர், கல்விப்பயிற்சியில்லாதவர் முதலாகிய எவ்விதக் குற்றமுடையோரும் அங்கிருந்திலர்,, என்றும், மிக்க தரித்திரமுடையாரையும், வியாதியாளரையும், இராசவிசுவாசமில்லாதவரையும் அந்நகரிற் காண்டலரிதாம்,, என்றும் பலவாறு நாகரிகம் நிலைபெற்றிருப்பதாயும், கல்வித்திறமை கைத்தொழில் சேனைகளின்பெருமை நகரத்தின் சிறப்பு இவையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்குள்ள ஜனங்களுக்குச் சந்தோஷத்தை விளைவிக்கும் பல சிங்காரவனங்களும் இருந்ததாய்த் தெரியவருகிறது. வீதிகளின் சிறப்பும் வர்த்தகமும் பலதேசத்து வர்த்தகர்களின் கூட்டமும் இராஜவிசுவாசமும் மந்திரிகளும் ஒற்றுமையும் ஒன்றாயிருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விதமாக மாபாரதத்தில் எவ்விடத்திலேனும் எழுதப்படவில்லை. மேலும் யுகாந்தரத்தில் சகோதரனுடைய ஸ்திரீயினிடம் மற்றொரு சகோதரனால் சந்தானோற்பத்தியுண்டென்று பாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதன்றியும் சீர்திருத்தக்குறைவாய் நினைக்கத்தக்க சில விஷயங்களும் பாரதத்திலுள்ளனவாம். ஐந்து பேர் ஒரு ஸ்திரியை விவாகம்செய்துகொண்டதாயும் பாரதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இராமாயணத்திலோ ஸ்ரீராமன் ஒரே மனைவியிடமிருந்தாரென்றே யிருக்கிறது. மேலும் பற்பல காவியநடைகள் இராமாயணத்தில் காணப்படுகின்றன. பல அலங்காரங்கள், பலதேச நிலைமை, மிகுந்த ஒற்றுமை இவைகள் நன்றாய் இராமாயணத்தி லெழுதப்பட்டிருப்பதாலும் மாபாரதத்தி லிவ்விதமில்லாமையாலும், மாபாரதம் முந்தியதென்பதும் இராமாயணம் பிந்தியதென்பதும் வெளியாகும். அன்றியும், இராமாயணத்திலே கோளதேசப்பெயர் இருக்கின்றது. அதுவும் இது சமீபகாலத்ததேயென்பதில் காரணமாகும்,, என்பது முதலாயினவாம். இவ்வகையான வாதங்களை மறுக்கவேண்டிப்பலவாறு எழுதவேண்டியிருப்பினும் புத்திமான்களுக்குச் சிறிது எழுதினாற் போதுமென நினைந்து சுருக்கமாகச் சிலவற்றை எழுதுவாம்.

வரும்.

மதமும், அதன் பிரயோசனமும், அதன் ஆசிரியரும்.

[க-ம் புத்தகம் கசுஉ-ம் பக்கத்தொடர்பு]

இதுவரையில் அத்வைத வித்தையின் ஆசிரியரான ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளவர்கள் அவரது சிஷ்யர்கள் நால்வர் இவர்கள் சரித்திரங்களைக்குறித்து யாம் அறிந்த மட்டில் எழுதி வந்தோமல்லவா? இனி அம்மதாசாரியர்களான ஏனையோர் சரித்திரத்தையும் சிறிது புகல ஆரம்பிப்பாம்.

உலகத்தில் ஓர் மகான்மாவின் சரித்திரத்தை எடுத்தெழுதவேண்டில் அதில் யாம் மேற்கோளாகக் கொள்ளவேண்டியவை அவர் செய்த புத்தகங்கள், அவர் சரித்திரத்தின் பாகங்களை எடுத்துக்காட்டும் மற்றவர் புத்தகங்கள், உலகத்தார் வழக்கத்திலும் யுத்திக்கு விரோதமில்லாத பாகம் இவைகளே. மேற்குறித்த காரணங்களால் யாம் அறிந்த மட்டில் அடியில் வருஞ்சரித்திரத்தை எழுதத்துணிந்தோம்.

[illegible]

இத்தென்னாட்டில், மிக்க புகழ் பெற்றவரும் அத்வைதாசாரியர் பரம்பரையிற் சேர்ந்தவரும அப்பயதீக்ஷிதர் எனப்பெயர் தாங்கியவருமான ஓர் மகாத்மா இருந்தனர். அவர் இவ்வத்வைத சித்தாந்தத்தை யனுசரித்துப் பலகிரந்தங்களை இயற்றினர்; அநேக விதண்டாவாதிகளை ஜயித்தார்; பலதிசைகளிற் புகழ்பெற்றார்; வடதிசையிற் பிறந்து பற்பல கிரந்தங்களை யியற்றிய அநேக வித்துவான்கள் புகழப்பதம் பெற்றார். அவர் பிறந்தவிடம் தென்னாட்டிலே காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள அடையப்பலம் என்னும் கிராமம். இப்பொழுதும் அவரது வம்சஸ்தருக்கு அடையபலத்தார் என்கிற பெயரே வழங்கிவருகின்றது. அவர் பிறந்தகாலம் நிச்சயமாய அளவிட்டபடாவிடினும ஒருவிதமாய் யூகித்தால் கலியுகாதி வருஷம நாலாயிரத்தறுநூற்றுநாற்பததேழு சென்ற பின்பாக விருக்கலாமென்று ஏற்படுகின்றது. அதாவது இங்கிலீஷ் வருஷம் ஆயிரத்தைஞ்ஞாற்று நாற்பதைந்து சென்றவுடனென்று ஏற்படும். அதற்குக்காரணங்கள் அம்பயனுடன் பிறந்த ஆசார்ய தீக்ஷிதருக்குப்பௌத்திரரான நீலகண்ட தீக்ஷிதரவர்கள் தாமியற்றிய நீலகண்டவிஜயம் என்னும் கிரந்தத்திலே அப்புஸ்தகமியற்றிய காலத்தைக் குறித்திருக்கிறார். அது செய்தகாலம் "[illegible]" என்கிற சுலோகத்தில் எழுதியபடி கலியுகாதி [4738] என்று ஏற்படுகின்றது. மேலும் இத்தேசத்திலுள்ள இதிகாஸக்காரர்கள் [அதாவது கதைகள் சொல்லும் ஜனங்கள்] 30-வது வயதில் நீலகண்டவிஜயத்தை அவர் செய்தார் எனவும், பன்னிரண்டாவது வயதில் ஸ்ரீமத் அப்பயதீக்ஷித சுவாமிகள் இவ்வுலகைத் துறக்க யத்தனிக்கும் பொழுது அனுக்கிரகம் பெற்றுச் சகல வித்தைகளையும் அவரிடம் பெற்றார் எனவும் சொல்லுகின்றார்கள். அதனால் அவர்கள் இவ்வுலகத்தை விட்டு நீங்கிய காலம் ஏற்படுமல்லவா? அதுகொண்டே நீலகண்டவிஜயகாரர் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதசுவாமிகளின் அனுக்கிரகத்தால் வித்தைகளை அறிந்தாரென்று தட்டிணதுவாரகை யெனக்கூறும் மன்னார்குடியிலுள்ள மகாமகோபாத்தியாய ராஜுசாஸ்திரிகளவர்கள் தாம்செய்த தியாகராஜஸ்தவத்தில் ([illegible]) "பரமசிவன் தனது பக்தனாகிய குபேரனை அனுக்கிரகித்தாற்போலத் தமதுசகோதரருடைய பௌத்திரரை அனுக்கிரகித்த பெருங்கருணை வெள்ளம் பெருகிய ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரவர்கள் எமக்கு வாக்குப்பலத்தைத் தந்தருள்வாராக,, என்று வெளியிட்டார். பிறகு அவர்களின் வாழ்நாளும் அவரது திருவாக்காலும் வெகுஜனவாக்காலும் ஒருவிதம் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இத்தேசத்தில் அவரது திருமரபிற் பிறந்தோர் அவர் [73] வயது வரையில் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். அவ்விதமே அத்தீக்ஷிதசிகாமணியானவர் தாம் சிதம்பரக்ஷேத்திரத்தில் "இச்சிதம்பரக்ஷேத்திரமோ உலகிற்சிறந்த க்ஷேத்திரம்; நமது குமாரர்களும் வினயபூஷணர்கள்; நாம் செய்யவேண்டிய செய்கைகளைச் செய்து முடித்தோம்; எமக்கோ வயது எழுபதுக்கு மேலாயின; போகேச்சைகளனைத்தையும்

[illegible]

துறந்தோம்; யாம் இவ்வுலகிற்கருதவேண்டிய தொன்றுமில்லை; இனியாம் அடையவேண்டியது சிவபதமே,, என்றுசொல்லிய ஒரு சுலோகத்தால் வெளியாகின்றது. அதுகொண்டே அவர் பிறந்தகாலத்தை ஒருவிதமாய் நிச்சயித்தோம். அவர் பிதாவின் பெயர் ஸ்ரீரங்கராஜ தீட்சிதர் என்பது. அத்தீட்சிதரவர்கள் தமது பிதாவிடமே வித்தியாப்பியாசம் செய்தாரென்பது அவர் தாம் எழுதிய சித்தாந்தலேசசங்கிரகம் என்னுங்கிரந்தத்தின் தொடக்கத்தில் "எமது பிதாவிடம் யாம் கற்ற சித்தாந்தங்களை மற்றவரறியச் சுருக்கி எழுதுவோம்,, என்று எழுதியதாலும் சிகரிணீமாலா வியாக்கியானம் சிவதத்துவவிவேகத்தில் "சகலவித்தைகளுக்கும் இடமாயும் சர்வஸ்வதட்சிணயாகம் செய்தவருமான மகாகுருவை வணங்குவேன்,, என்றும் முடிவில் "ஸ்ரீரங்கராஜதீட்சிதர் குமாரர் அப்பயதீட்சிதர் என்கிற சிவபக்தர்,, என்று எழுதியதாலும் அறியலாம். அவ்விதமே முற்கூறிய மகாமகோபாத்தியாயர் அவர்கள் தாம் எழுதிய வம்சபிரபந்தத்தில் தொடங்கும்பொழுதே "ஆசாரியதீக்ஷிதர் பெருமைதாங்கிய ரெங்கராஜதீட்சிதர் புகழத்தக்க ஸ்ரீமத் அப்பயதீட்சிதர் அவர்கள்,, என்று முறையே வம்சத்தையெடுத்துக்காட்டியதுங்காண்க. அவர்களுக்கு வித்தியாவிசுவாசமும் சிவபக்தியும் வேதாந்தத்திலன்பும் இயற்கையிலுள்ளது. அவர் முதலில் ஸ்ரீநீலகண்டசிவாசாரியரவர்களியற்றிய பிரமசூத்திரபாஷியத்திற்கு ஸ்ரீசிவார்க்கமணிதீபிகையென்னும் ஓர் வியாக்கியானம் செய்தருளினர். மற்றும் பரமசிவப்பெருமானுடைய பெருமையை விளக்கப் பல நூல்களையியற்றினர். அவற்றின் மேன்மையும் விஷயங்களும் பின்வரும். இங்ஙனமிருக்க, நர்மதாநதியின்கரையில் வசித்து, பேதிதிக்காரம் ஸித்தாந்த ஸித்தாஞ்சனம் முதலிய கிரந்தங்களையியற்றி வெற்றிபெற்ற ஸ்ரீநரசிம்மாச்சிரமசுவாமிகள் அப்பயதீட்சிதரவர்கள் கல்வித்திறமையையும், அவர் பிறந்தது ஸ்மார்த்தகுலமென்பதையும், அவர் அத்வைதசாஸ்திரத்தைப்பற்றி ஒன்றும் எழுதிற்றிலரென்பதையுங் கேழ்வியுற்று, தெனநாட்டையடைந்து அவரைக்கண்டு அத்வைதசித்தாந்தத்தை விளக்கும்படிமொழிய, அதுமுதல் அத்வைதநூல்களில் பல எழுதிமுடித்தாரென்றும், அவ்வத்வைதநூல்களில் பரிமளமென்பது முதன்மைபெற்ற நூலென்றும் பல காரணங்களால் வெளியாகிறது. இதுவிஷயம் காசிக்ஷேத்திரத்திற்பிறந்து மகாபண்டிதராயிருந்த ஸ்ரீமத் அகோபலபண்டிதாசாரியார் எழுதிய ஈசானஸ்துதியில் தீட்சிதாவர்கள் வரலாற்றைச் சுருக்கிய சுலோகத்தில் "தட்சிணமூர்த்திக்கொப்பான ஸ்ரீ நரசிம்மாச்சிரமிகளேவுதலால் தீட்சிதரவர்கள் பரிமளமென்கிற கிரந்தம் செய்தார்,, என்று எழுதியிருப்பதால் வெளியாவதுமன்றி, அத்தீட்சிதசுவாமிகளும் தாமே இவ்விஷயத்தை அப் பரிமளகிரந்தத்தின்தொடக்கத்தில் சூசனஞ் செய்திருக்கிறார்கள். "எமது குரு எமக்குபதேசித்த உண்மைகளை மறந்திருக்க அதைக்கண்டு மற்ற போதித்ததனால் இப்பொழுது பரமசிவனை வணங்கி கல்பதரு என்கிற கிரந்தத்திற்கு வியாக்கியானஞ்செய்குவேன்,, என்பது அப் பரிமளகிரந்தத்தின்முதல் சுலோகத்தின் கருத்து. அவர்கள் ஏனைய மதங்களையுமனுசரித்துப் பல கிரந்தங்களைச் செய்தார்கள். அவைகள் (ாசு) என்பது பிருதாவளியில் நூற்றுநான்கு கிரந்தங்களை யெழுதியவரென்றிருப்பதால் தெரியவருகிறது. இப்பொழுது சுமார் ருய-கிரந்தங்கள் வழங்கிவருகின்றன. அவைகளுள் இப்பொழுதும்

[illegible]

பிரசாரமாகுங் கிரந்தங்கள் அத்வைதசித்தாந்தத்தைச் சார்ந்தன. அவற்றுள் நிர்க்குணபரப்பிரமப்பொருளைக் காட்டுவன ஸ்ரீ பரிமளம், சித்தாந்தலேசசங்கிரகம், வேதாந்தநக்ஷத்திரவாதாவளி, மத்துவதந்திரமுகமர்த்தனம், மத்துவமதவித்துவம்சனம், நியாயரக்ஷாமணி என்னும் ஆறுமாம். சகுணப்பிரமப்பொருளைக் காட்டுவன சிகரிணீமாலா, சிவதத்துவவிவேகம், பிரமதர்க்கஸ்தவம், லகுவிவரணம், ஆதித்தியஸ்தவரத்தினம், அதனுரை, சிவாத்துவிதநிர்ணயம், சிவத்தியானபத்ததி, பஞ்சரத்தினஸ்துதி, அதனுரை, ஆத்மார்ப்பணம், மானஸோல்லாசம், சிவகர்ணாமிர்தம், ஆநந்தலகரி, சந்திரிகை, சிவமகிமகலிகாஸ்துதி, இரத்தினத்திரயபரீக்ஷை, அதனுரை, அருணாசலேசுரர்துதி, அபீதகுசாம்பாள்தோத்திரம், சந்திரகலாஸ்துதி, சிவார்க்கமணிதீபிகை, சிவார்ச்சனசந்திரிகை, சிவபூஜாவிதி, நயமணிமாலை, அதன் சிற்றுரை என்னும் இருபத்தாறுமாம். சிவோத்கர்ஷத்தை விளக்கவந்த புஸ்தகங்கள் ஸ்ரீமத்ராமானுஜாசாரிவர் சித்தாந்தத்தை யனுசரித்தெழுதியன நயமயூகமாலிகை, அதன் பொழிப்புரை, ஸ்ரீவேதாந்ததேசிகரியற்றிய யாதவாப்யுதயமென்னுங் காவியத்திற்குரை, மேற்படியாரியற்றிய பாதுகாசகஸ்திரத்திற்குரை, வரதராஜஸ்துதி என்னும் ஐந்துமாம். ஸ்ரீமத் ஆனந்ததீர்த்தரென வழங்கும் ஸ்ரீமாத்துவாசாரியர் சித்தாந்தத்தையனுசரித்த புஸ்தகங்கள் நியாயரத்தினமாலை, அதனுரை என்னும் இரண்டுமாம். அலங்காரசாஸ்திரத்தில் அர்த்தசித்திரமீமாஞ்சை, குவலயானந்தம் என்னும் இரண்டுமாம். பூர்வமீமாஞ்சையில் விதிரசாயனம், நக்ஷத்திரவாதாவளி என இரண்டாம். வியாகரணத்தில் நக்ஷத்திரவாதாவளியெனவொன்றும். ஆகமொத்தம் (௩௪) இன்னும் அநேக கிரந்தங்கள் சிற்சில பாகங்கள் குறைந்துபோயினவாய்க் கிடைக்கின்றன. இவைகளின் விஷயங்களும் இவற்றையெழுதிய காரணமும் மற்றோரிடத்து எழுதுவோம்.

இவை இங்ஙனமிருக்க, மதவிநாசமென்னுங் கிரந்தத்தை எழுதிய ஒருவர் பல மதாசாரியர்கள் சரித்திரங்களை யெழுதப்புகுந்து இவ் வப்பயதீட்சிதர் சரித்திரத்தையும் ஒருவிதம் எழுதியிருக்கின்றார். அவர் அத்தீட்சிதருடைய கிரந்தங்களையும், அவருடைய வம்சஸ்தர் கிரந்தங்களையும், அவர் வம்சஸ்தர் கூறுவனவற்றையும் சிறிதேனுங் கேளாது தாம் தமக்குள்ள ஏதோ ஒருவித மூலகாரணமற்றகேள்விபைக்கொண்டு எழுதியதாகவே தெரியவருகின்றது. ஆதலினாற்றான் அது முற்றிலும் வேறுபட்டிருக்கின்றது. அவர், ஸ்ரீமத் அப்பயதீட்சிதருடைய தந்தையார் பெயர் நாராயணதீட்சிதரென்பதென்றும், அவர் தென்னாட்டிலே பெரிய பண்டிதரென்று பெயர்பெற்றவரென்றும், அவரும் சங்கராசாரியசுவாமிகளைப்போல் ஓர்வித நாஸ்திகரென்று அவர்எழுதிய பிரபோதசந்திரோதயத்தாற் றெரியவருகிறதென்றும், அவர் சிவதத்துவவிவேகமுதலிய பல கிரந்தங்களையெழுதினரென்றும் இவ்வாறுபலவற்றைஅச்சரித்திரத்திலே யெழுதியுள்ளார். அந்தோ! இஃதென்னவிபரீதம்? அத்தீட்சிதரவர்கள் தாமியற்றிய ஒவ்வொருநூலிலும் தமது பிதாவின் பெயர் ரெங்கராஜதீட்சிதரென் றெழுதியிருப்பவும் இப்படி யெழுதினால், அதற்குக் காரணம் அவர் புத்தகங்களி லொன்றேனு மறிபாமையேயன்றிப் பிறிதுமுளதோ? அன்றியும் சிவதத்துவவிவேகமுதலிய கிரந்தங்களைச் செய்தவரென்று கூறியும், பின்பு அவரையும் ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளையும் சேர்த்து நாஸ்திக

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ரெனச் சாற்றினர். அவர் நாஸ்திகராவரேல் பரமசிவப்பிரா னுடைய பெருமையை எவ்வாறு விளக்கினரோ அறியேம்! இவ் விதமறைதற்குக் காரணமாகப் பிரபோதசந்திரோதயத்தை எடுத்துக்காட்டினர். அது மிக விந்தையிலும் விந்தை! பிரபோத சந்திரோதயஞ் செய்தவர் ஸ்ரீ கிருஷ்ணமிச்சிரரென்று அதே புஸ்தகத்திலிருக்க அதையும் பாராமல் எவரோ சொல்லக்கேட்டு இவ்வாறெழுதுவது உசிதமல்லவே. அன்றியும், நமவில் சங்கராசாரியரையும் நாஸ்திகரென்றார். தாம் ஆஸ்திகரென்றும் சொல்லிக்கொள்ளுகிறார். அவர் ஆஸ்திகராயிருப்பது எப்போலியர்களாகிய ஆஸ்திகர்களுக்கும் சந்தோஷமே. ஆயின், நாம் இவரைக் கேட்கவேண்டியதொன்றுண்டு. அதாவது ஆஸ்திகன் எவன்? நாஸ்திகனெவன்? உலகத்தில் கடம் உண்டென்பதால் ஆஸ்திகனுவனே? அஃதின்றென்பதால் நாஸ்திகனுவனே? இவற்றிற்கு அவர் பிரமம் [அதாவது கடவுள்] உண்டென்பான் ஆஸ்திகன், அஃதின்றென வாதாடுவோன் நாஸ்திகன் என்று விடையளிப்பார்போலும். அங்ஙனமாயின், அப்பிரமமேயுள்ள தெனக் குறிக்கும் பெருநூலியற்றியவராய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் நாஸ்திகராவதெங்ஙனே? அறிகிலேம்! மற்றெவர்தாம் ஆஸ்திகராவரோ? அன்னதும் அறிகிற்றிலேம்.

வரும்.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

வேதாந்த சங்கிரகம்.

அப்பயதீக்ஷிதர் உபநியாசம்.

இப் பூமண்டலத்தில் வேதங்களென்பன உண்மையை விளக்கும் நூல்களென எல்லா மதஸ்தர்களும் ஒப்பியிருக்கின்றார்கள். அவ்வேதங்கள் தமிழ்ப்பாஷையிலுள்ளனவென்று சிலரும், பார்சீபாஷையிலுள்ளனவென்று சிலரும், பேற்றிசையார் பாஷையாகிய ஹீப்ரு, கிரீக் முதலிய பாஷையிலுள்ளனவென்று வேறு சிலரும் இப்படிப் பலவிதமாகச் சொல்வார்கள் அவரவர் தத்த மதங்களின் வேதங்களே பரமனுலருளப்பட்டனவென்று தாபிக்குமாறு பற்பல முயற்சிகளைச் செய்துவருவார்கள். அதற்குச் சிற்சில பிரமாணங்களையுங் காட்டிவருவார்கள். ஆயினும், எவரும் நிஷ்பக்ஷபாதமாய் ஆராய்வராயின் ஸம்ஸ்கிருதபாஷையே பாஷைகளில் முதன்மைபெற்றதென்பது போதருமாதலின், அதிலுள்ள வேதமே இவற்றுள் முதன்மைபெற்று அநாதியாயெய்துவதிற் சிறிதுந் தடையின்றாமெனக. அவ்வேதங்கள் இருக்காதியவென்பதும் எல்லோருமறிந்ததேயாம். அவ்வேதங்களின் பொருளை வெளியிடுதற்கு விரும்பிய நாம் அவ்வேத முடிவான உபநிஷத்துக்களின் உண்மையை விளக்கும் பிரமசூத்திரம், பகவற்கீதை முதலாகிய பற்பல கிரந்தங்களைத் துணையாகக்கொண்டு, எமது சிற்றறிவிற்கெட்டியபடி பலருக்கு மானந்தமுண்டாக்க முயலுவோம்.

இவ்வண்ணம் முயல்வது பிறர் பரிகசித்திடத்தக்க பல குற்றங்களை விளைவிக்குமேனும், குற்றத்தைநீக்கிக் குணத்தைக்

[illegible]

கொள்ளும் உத்தமசீலரான வித்துவான்கள் இதைக் கனப்படுத்துவார்களென்றே நம்புகின்றேம்.

இவ்விஷயத்தில் யாம் முன்னெடுத்துரைத்த உடன்பாட்டங்களின் உண்மைப்பொருள்களை அவ்வவர் மதங்களுக்கேற்ப விளக்கிப் பெரும்புகழெய்தித் தமது சித்தாந்தத்தை யாவரும் பின்பற்ற நிலைநிறுத்திடச்செய்தவர்கள் மூவர். அவர் துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள் எனப்படுவார்கள். அவர் சித்தாந்தங்களுள் துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைப்பற்றி யாம இங்கு ஒன்றேனும் எழுதுவதில்லை. எற்றிற்கெனில், இம் மூன்று சித்தாந்தங்களுள் அத்வைதசித்தாந்தமே பூர்த்தியதாகலான் அதனையே முதற்கண் விசாரித்திடுவாம். அங்ஙனமே இப்பாதகண்டத்தில இவவத்வைதமததை வெளியிடும ஆசிரியர்கள எவ்வெவ்விதமாக எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வுண்மைகளையும அவற்றின்காரணங்களையும் வெளியிடுவார்களோ அவவவவிடங்களில் அவ்வவ்வுண்மைகளையும் அவவற்றின் காரணங்களையும வெளியிடுவாம.

க. அங்ஙனமன்றே இச்சகத்திற்குக்காரணம் சகுணத்தாற் குறிக்கப்பட்ட நிர்க்குணமாய பரப்பிரமமே. சாங்கியநூலார் முதலாயினோர் குறித்தபடி பிரதானமென்னும் பொருண் முதலியனவன்று. என்னெனில், அவை அறிவில்லாப்பொருளாதலால் வேதங்களுள் உலகத்தைச் சிருஷ்டிக்கக் கருதினுன் என்று தொடங்கிப் பலவிடங்களில் அறிவின் தொழில் சொல்லப்படுகிறபடியாலும் அறிவற்ற இவை காரணப்பொருளாவது ஒருபொழுதும் பொருந்தாது. அணுக்களே உலகத்திற்குக் காரணமென்பதை உலகியல்புணர்ந்து உண்மையைச்சுவர்ந்து உள்ளங்களித்த உயர்ந்தோர் ஒருபொழுதும் ஒப்பார். இவ்வுலகில் குடம் சட்டி முதலாயின எவ்வாறு மண்ணின்கணுள்ளனவோ, கைவளை கிரீடம முதலிய ஆபரணங்கள் தங்கத்தின் றிரிபோ அவ்வாறு தான் என்றும் தனது என்றும் இருவகைப்பற்றிற்கு மிடமான இவ்வுலகம் பரப்பிரமத்திற் றேன்றியதே. ஆதலின், முற்கூறியவிடம் காரியமாய குடமுதலாயினவும், காரணமாய பொன்முதலாயினவும், அவற்றிற்றேன்றிய ஏனையவுருவங்களும்போலப் பிரமத்தின் வேறாயதன்றாம். அதுபற்றியே "எல்லாம் உண்மை ஆன்மாவாக நோக்கில்,, என்று வேதம் கூறுவதென்றுணர்க. "உள்ளது போகாது இல்லது வாராது,, என்னும் ஓர் நியாயமும் நிலைபெற்றதெனக.

உ. மேலும், இப்பியில் வெள்ளியும், கயிற்றிற் பாம்பும், மரத்திற்றிருடனும், மலடியின் மகனும், முயலின் கோடும் போல் இச் சகமானது பரப்பிரமப்பொருளிலே தோன்றியதன்றிப் பிறிதன்றாம். தோற்றன்மாத்திரமான பொருளுக்கு அத்தோன்றலினிடமாய அதிட்டானத்தின் சத்தையிலும் வேறாய் ஒன்று கிடைத்தலரிதாதலால், தோன்றும் பொருள் எக்காலத்து மிலதேயாம். பற்பல பிரமாணநுசந்தானத்தால் காரியங்களெல்லாம் காரணரூபமாய்த் தோன்றும் பிரபஞ்சனிச்சு இவ்வுலகம் அங்கியிலிட்ட வஸ்திரம்போல ஆகாரமாத்திரந் தோற்றினும், உலகம் அசத்தேயாவது திண்ணமாம்.

ங. மேலும், சாக்கிரம் சொப்பனமென்னுமிரண்டுவித அவஸ்தைகளைக் கடந்து மூன்றுமல்லதையிற்றேன்றுவதும், ஸம்பிரமதாதமென்று வேதங்களில் புகழப்பட்டதும் அத்து

௩. [illegible]

௪. [illegible]

௫. [illegible]

௬. [illegible]

[illegible]

விகமாகிய பிரமமே. அதனையே பரமென்றும், ஜோதியென்றும், ஆகாயமென்றும் பலவிடங்களிற் சொல்வதாம். "எவ்விடம் யாதுங் கண்டிலன் யாதுங் கேட்டிலன்,, என்று தொடங்கிய பல வேதவசனங்களாற் பிறிதொன்றில்லையென விளங்குதலாலும், "தினமும் பிரமத்தையடைவார்,, என்று ஒவ்வொரு தினமும் பிரமத்தையடைவதாக வேதங்களிலிருத்தலாலும், ஒவ்வோருயிரும் எப்பொழுதும் சுழுத்தியிற் பிரமத்தையடைவதாய்ச் சொல்லவேண்டியதாயிற்று. இதற்குப் பிரமாணங்கள் பிரகதாரண்ணியோபநிடதம், அஜாதசத்துருபிராமணம் என்பனவே. அதுகொண்டு சுழுத்தியிற் பிரமநிலை வெளியாயிற்றென்க.

௪. ஜீவனும் பிரமப்பொருளும் ஒன்றென்பதும் "அவனே இச் சாத்தன்,, என்றபடி விட்டும் விடாத ஆக்கலென்னும் ஆற்றலால் அவரிடம் தோன்றும் சிற்றறிவு பேரறிவுத்தன்மைகளை விட்டுத் தனியே அறிவின் தன்மையைக்கொண்டு, அவ்விருபொருளையும் ஒன்றென்றுபதேசிக்கும் பல வசனங்களால்விளங்கும் ஆச்மாத்தியர், ஔடுலோமி, காசகிருச்சினர் என்று ஐக்கியவாதிகளான இம்மூவாசிரியருள் மூன்றாமாசிரியர் ஜீவனென்பதை வேறுபொருளாக ஒவ்வாததால் அதுவே உபநிடதங்களின் உட்கருத்தாம். பந்தகாலத்திலும் ஜீவனென்பது பிரமத்தினும் வேறாயிருக்குமாயின் அத்துவிதம் சித்திக்காதது காண்க. "மற்றொன்றுண்டாயின் மக்களுக்குப்பயம்,, என்றும், "மாயாமாத்திரையில்துவிதம்; உண்மையிலுள்ளது அத்துவிதம்,, என்றும் பற்பல வேதவசனங்கள் காணப்படுதலால், ஜீவனும் பிரமவஸ்துவும் ஒன்றென்பது பெறப்பட்டதென்க.

௫. மற்றும் "அவனையறிந்தவன் அருள்பெறுவான்,, என்றுதொடங்கிய பல வசனங்களால் பரப்பிரமத்தின் சொரூபவறிவே மோக்ஷத்திற்குக் காரணமென்று ஏற்படுதலால், ஏனைக் கர்மங்கள், யோகங்கள், உபாசனைகள் இவையெல்லாம் மோக்ஷத்திற்கு நேரான சாதனங்களன்றாம். நான்கு வேதங்களின் சித்தாந்தவாக்கியங்களான மகாவாக்கியங்களால் வெளிப்படும் உண்மையறிவே உள்ளதென்பது பெறப்பட்டது. அது தக்க காரணமுள்ளதுமாகுமென்க.

௬. பின்னும், வருணாசிரமதருமங்கள் வேதங்களின் கருமகாண்டங்களிலே பல சொல்லப்படினும், அக்கருமங்கள் துவிதவிஷயமாகலானும், தேகமே ஆன்மாவென்னும் பொய்யறிவைப் பற்றுதலானும், அத்துவிதநிலையை யடைந்த ஓர் மகான்மாவுக்கு நித்தியம் நைமித்திக முதலிய கருமக்கட்டுக் கிடைப்பதேயில்லை. "உண்மையில் பிரமமறியற்பாலது,, "உண்மையில் தருமம் செயற்பாலது,, என்று தொடங்கிய பல வாக்கியங்களால் பாஷியகாரர் கருமகாண்ட ஞானகாண்டாதிகாரிகளைத் தனித்தனியே எடுத்துக்காட்டினாரென்றறிக. அஞ்ஞானமொழிதற்பொருட்டுப் பரம்பரையில் கருமமும் காரணமாயினுமாகுமேயன்றி, அதுமாத்திரமே யவித்தையையொழிக்குங் கருவியாகாது. சூரியன் பிற ஒளியை எவ்விதம் வேண்டுதலில்லையோ அங்ஙனம் பிரமஞானம் அவித்தையை யொழித்தற்கு வேறு கருவிகளை ஒருபொழுதுங் கருதாது. ஆதலின், ஞானமும் கருமமும் வேண்டுமென்பது வெளியாயிற்றென்க. வரும்.

(மொழிபெயர்ப்பு)

[illegible]

——):*:(*):*:(——

[illegible]

[illegible]

பாஷோத்பத்திப் பிரசங்கம்.

[௧-ம் புத்தகம் ௧௭௰-ம் பக்கத்தொடர்ச்சி]

பாஷைகள் இரண்டாவது நிலைமையில் உத்பத்திப்பருவமுள்ள சில வேற்றுமைத்தோற்றமுடைய கெடுதலடைந்த மூலப்பகுதியினுருபுகளாகவே காணப்படுகின்றன. ஆயின், இந்நிலைமையில் வேற்றுமையைக்குறிக்குமடையாளங்கள் சுதந்திரங்களேயாம். எங்ஙனமெனில், தென்மொழியில் புஸ்தகமானது, இராமனுடையவன் என்பதுமுதலிய பெயர்ச்சொற்கள் ([illegible]) என்ற பொருளில் உபயோகிக்கப்படுகின்றது. இவ்விடத்தில் முதலாவதுவேற்றுமைக் குறியாகிய ஆனவன், ஆனது என்ற உருபுகள் (தத்) என்ற சப்தத்தின்பொருளாகிய அது என்ற சர்வநாம சப்தத்தின் உருவபேதங்களே. ஆகையால், அவன் அதை என வேறாகவும் பிரயோகிக்கக்கூடும். இன்னமும் மலையாண்மொழியில் (ராமனு தந்றெ) என்று (ராமஸ்ய) என்ற பொருளில் ஆறுவதுவேற்றுமையைக் குறிப்பதன்பொருட்டு (தநு) என்ற சர்வநாமத்துக்கு (ராமநு) என்ற பகுதியுடன் சேர்க்கையாம். இந்நிலைமையில் சொற்கள் ஒருக்கால் வேற்றுமையைக்குறிக்குமுருபுகளன்றியும் பிரயோகிக்கப்படுகின்றன. எங்ஙனமெனில், மலையாண்மொழியில் (புஸ்தகத்தெ கொண்டுவந்நு) எனக் கூறவேண்டியவிடத்தில் (புஸ்தகம் கொண்டுவந்நு) எனப் புஸ்தகம் என்ற சொல்லை (தெ) இரண்டாம்வேற்றுமையுருபின்றியே பிரயோகிப்பதைக்காண்கின்றோம். இவ்வித பாஷைகள் (ஸம்ஸ்லிஷ்ட)ங்களெனப் பெயர்பெறும். இப்பாஷையிற் பெரும்பாலும் தென்மொழி, பிராகிருதம் முதலிய பாஷைகளும் கலந்துவருகின்றன. வேற்றுமையைக் குறிக்கும் பதங்கள் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய காரியங்களால் விகாரப்பட்டு, எக்காலத்தில் வேறு பதமென்ற தோற்றலுக்கிடமில்லாத உருவத்தைப்பெற்று விகுதியெனப் பெயர்பெறுகின்றதோ அக்காலத்திற்றான் பாஷை மூன்றாவது நிலைமையை அடைகின்றது. அவை யாதெனில், சம்ஸ்கிருதம், பிராகிருதம் முதலியவையே. இவ்விடத்தில் ([illegible]) பகுதியானாலும் விகுதியானாலும் தனியே பிரயோகிக்கத்தகாது எனச் சாஸ்திரமிருப்பதால், சொற்கள் முழுவதும் பெயர்ச்சொற்கள் அல்லது வினைச்சொற்களாகவே பிரயோகிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட பாஷைகள் (க்ருத்-தத்தித)மெனப் பெயர்பெற்ற விகுதிகளின் விருத்தியை யுடையனவாதலால் (வ்ருத்த)ங்களெனக் கூறப்படுகின்றன. இந்த நிலைமையிற்றான் பாஷைகள் நிறைந்த பருவத்தை யடைகின்றன. இவ்விதம் பரிபூர்ணமான சம்ஸ்கிருதம், லாதின்முதலிய சில ஆரிய பாஷைகள்தான் இக்காலத்தில் விளங்கிவருகின்றன. பல பாஷைகள் இரண்டாவதான (ஸம்ஸ்லிஷ்ட)ங்களென்ற பெயரளித்த நிலைமையைக் கடவாமலேயிருக்கின்றன.

ஆனதால், இந்தச் சம்ஸ்கிருதபாஷையில் இப்பொழுது [illegible] முதலிய எந்தெந்த விகுதிகளுளதோ அவையனைத்தும் வேற்றுமை, எழுவாய், செயப்படுபொருள் முதலியவற்

[illegible]

றின்பொருளைக் குறிப்பதற்காக நமது பெரியோர்களாற் பிரயோகிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுடைய தோன்றல், திரிதல், கெடுதல் முதலியவற்றுற் கவரப்படாத மிச்சங்களாயிருக்கவேண்டுமெனக்கொள்க. அவற்றுள் சிறிது எடுத்துக்காட்டுவோம். அவையாதெனில், ([illegible]) முதலிய இடங்களில் எழுவாயைப்பொருளாயுடையதும், தன்மைமுதலியவைகளைக் குறிப்பிடுவதுமாகிய எந்த [[illegible]] என்றவிகுதிகளைக் காண்கின்றேமோ இவைகள் யாவும் இரண்டாவது நிலைமையில ([illegible]) முதலிய பிரயோகங்களுடைய காலக்கிரமத்தால் திரிபுபெற்ற வுருவங்களெனக் கூறத்தகும். அப்பொழுது படர்க்கையைக் குறிப்பிடுவதினுபொருட்டு ([illegible]) என்ற பகுதியானது வினையுடன் சேர்க்கப்பட்டதெனக்கொள்க. அவ்விதமே முன்னிலையைக் குறிப்பதற்காக ([illegible]) என்ற ([illegible])த்தின் பகுதியும் அங்ஙனம் படர்க்கையைக்குறிப்பதற்காக ([illegible]) என்கிற ([illegible])த்தின் பகுதியுமெனக்கொள்க. ஆனதுகொண்டுதான் ([illegible]) முதலியவிடங்களில் ([illegible]) நீ, நான முதலிய எழுவாய்கள் பிரயோகிக்கப்படாவிடினும் பொருள் உண்டாகின்றது. படர்க்கையிலோவெனில் எழுவாய் சொல்லப்பட்டிருந்தாலும விசேஷத்தை வெளியிடுவதினிமித்தம் அவ்வெழுவாயைப் பிரயோகிப்பது ஆவசியகமெனவறிந்துகொள்க. இவ்விஷயத்தில் இலக்கணகாரர்கள் மகாபாஷியமுதலிய நூல்களிற் கூறப்படாததுகொண்டு இதைச் சாஸ்திரசம்மதமல்லவெனப் பகரப்போகாது. ஏனெனில, இந்த நடைவசனமானது பாணினி முதலிய இலக்கணநூலாசிரியர்கள் உண்டாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே தொடங்கி வழங்கி வருகிறதல்லவா? இந்தச் சம்ஸ்கிருதபாஷையிலும் காலாதிக்கிரமத்தாற் பற்பல பேதங்களுண்டாயினவென்று எளிதில் உரைக்கக்கூடும். எப்படியெனில், நெடுங்காலமாய் வழங்கிவரும் வைதிகவடமொழிக்கும் நம்மாற் பேசப்பட்டுவருகிற வடமொழிக்கும், சிறு குளத்திற்கும் கடலுக்கும, ஆட்டுக்கும் யானைக்கும், புழுவுக்கும் பன்றிக்கும்போல் மிகுந்த பேதம் காணப்படுகின்றதன்றே? வேதசங்கிதை யுண்டாகுங்காலத்து இலக்கணமுதலிய நூல்கள் செவிக்குட் புகுந்ததேயில்லை. சப்தப்பிரமமாகிற அரசாக்ஷியில், ஓரிடமுங் குன்றுததும் மிகப்பெரிதுமான இலக்கணநூலதிகாரமானது அரசர்களுடைய அதிகாரம் எங்ஙனம் முனிவர்களிடம் செல்லாதோ அங்ஙனமே வேதவாக்கியங்களைத் தொடுவதற்குக்கூடச் சக்தியற்றதாயிருக்கின்றது. ஆனதாற்றான் பாணினியென்னும் ஆசிரியர் வேதவிஷயமான இலக்கணசூத்திரங்களில் பகுளமெனப் பிரயோகித்திருக்கின்றார். சிலவிடங்களிற் பிரவர்த்திக்கும் சிலவிடங்களிற் பிரவர்த்திக்காது; சிலவிடங்களில் விகற்பமாகும் சிலவிடத்து வேறுகவே ஆகுமென அந்தப் பகுளமென்ற சொல்லின் பொருளாம். ஆனதாற்றான், பவபூதியென்னுங் கவியானவர் ([illegible]) “லௌகிகர்களாகிய சாதுக்களுடைய வாக்கானது பொருளைத் தொடர்கிறது; முதியோர்களாகிய முனிவர்களுடைய வசனத்தைப் பொருள் தொடர்கின்றது,, எனக் கூறினர். இந்தச்

[illegible]

[illegible]

[illegible]

சுலோகத்தால் மகாமுனிவர்களுக்கு லௌகிகர்களாகிய சாதுக்களைககாட்டிலும் விலக்ஷணமான பிரபாவமுண்டென்பது கவியின் கருத்தாயினும், தற்காலம் பாஷைகள் வ்யவஸ்தையற்றிருந்ததால் அவ்விதமாய்ப் பொருள்படுவதும் உசிதமெனக்கொள்க. காளிதாசாதி கவிபணிகளின் ஸம்ஸ்கிருதத்திற்கு மிக்காலத்தவர் சம்ஸ்கிருதத்திற்கு, சிலவிடங்களிற் பேதமிருப்பது யாவருமறிந்தவிஷயமே. எங்ஙனமெனில், அவரியற்றியுள்ள இரகுவம்சகாவியத்தில் ([illegible]) என்றும், அவ்விதமே குமாரசம்பவத்தில் ([illegible]) என்றுங் காண்கின்றேம்; யாமோ ([illegible]) என்று பிரயோகிக்கின்றேம். அக்காவியங்களுக்கு உரையெழுதிய மல்லிநாதன் முதலியவர்கள் மகாகவிப்பிரயோகமாதலாற தோஷமில்லையெனக் கூறியிருக்கின்றனா. மேலும், காளிதாசருடையகிரந்தங்களில ([illegible]) ங்களென்ற வினைச்சொற்களையே காணும். இக்காலத்துக்கவிகளுடைய நூல்களிலோவெனில் ([illegible]) ங்களென்கிற இருவகை வினைச்சொற்களைத்தவிர வேறுவினைச்சொற்களைக்காண்பது அரிதாயிருக்கிறது. முந்திய சிலகவிகள் வைதிகபதங்களைக்கூட ஒருக்காற சிலவிடங்களிற் பிரயோகித்திருக்கின்றனர். ([illegible]) என மலையாளதேசத்திலுண்டான நாராயணபட்டரென்பவர் கூறியிருக்கிறார். இவ்விடத்தில் ([illegible]) என்றபதம் ([illegible]) என்று நிபாதனம் செய்திருப்பதால் வேதத்தில் மாத்திரத்திற் பிரயோகிக்கக்கூடும். ஆ! பிரகிருதமில்லாத விஷயங்களுடைய உபநியாசத்தால் வெகுதூரங்கடந்துவிட்டோம். பிரகிருதவிஷயத்தை அனுசரிப்போம். கிளைவழியாய் பாஷையாகிய பூங்கொத்தைப் பரீக்ஷியாநின்ற நம்மால் இன்னமும் அடிவேர்வரையிற்றான் அடையப்பட்டது. இப்பொழுது இவ்வேர்கள் எந்த விதையினிடமுண்டாயினவென்றும் எவனால் அவ்விதை விதைக்கப்பட்டதென்றும் எவை தோகதசம்ஸ்காரங்களாயிற்றென்றுப் தேடுவோமாக.

[மொழிபெயர்ப்பு] அ. ற. ராஜராஜவர்மா.

குலிசக்காரன் செய்துகொள்ளுகிற விண்ணப்பம்.

ப்ரம்மஸ்ரீ வேதமூர்த்திகாள்! நான் விபூதிதாரணஞ் செய்துகொள்ளுவதைக் கண்டு பொறுமையடைந்த பாஞ்சராத்திரிகள் கண்டபடி தூஷித்தமையால் யான் குதர்க்காசலகுலிசத்தை வெளிப்படுத்தினேன். அதுகண்ட வைசான்சரொருவர் குலிசத்தைமாற்ற வெத்தனித்தார். பின்னொருவர் பின்னொருவராகப் பூர்வபக்ஷிகள் பலர் கிளம்பினர். கிளம்பினாலுமென்ன? எமது குலிசத்திற்கு உபபலமாய்க் கிளம்பிய சித்தாந்தியார் கொடுத்த விடையானது பண்டிதர்கள் சபாசென்று மெச்சும்படி நியாயபணங்களைப் பூர்வபக்ஷிகளுடைய எல்லாவிதமான ஆக்ஷேபங்களையுஞ் சவர்ந்து சுவீகரித்துவிட்டன. இன்னும் எத்துணை கிளம்புகினும் சித்தாந்தியாரதுபோராற்றலின் முன்பு ஜீவிக்கமாட்டா. சென்ற சஞ்சிகையிலும் “வைதிகசித்தா

[illegible]

[illegible]

ந்தரத்திருவளி,, என்கிற மகுடங்கொடுத்து அம்மகுடவாக்கி யத்திற்குச் சிறிதும் பொருந்தாத அவைதிகமார்க்கத்தையே வழவழவென்று ஒருவரெழுதியிருக்கிறார். அது படிப்பதற்கே சிரிப்பு விளைப்பதாயும், யாரோ பாஞ்சராத்திரியா லெழுதப் பட்டுச் சங்கராசாரியசிஷ்யனொன்று பொய்ப்பெயர் காட்டப் பட்டதாயுமிருப்பதால் அதற்குப் பதிலெழுதாமல் அசட்டை செய் தொதுக்கினோம். இங்கு நேர்ந்த வாதமெல்லாம் விபூதிதாரணத்தையே முக்கியமாய்ப்பற்றிவந்தது. அதனைப் பல வாற்ருனுந் தாபித்துமுடித்தோம். இனிப் பூர்வபட்சிகள் பலரும் அவருள் மூத்தவராகிய வேலூர் ஸ்ரீலோகரஞ்சனிப்பத்திராதிபரும், எமது குலிசத்தையும் சித்தாந்தியார் கொடுத்த விடைகளையும் ஒருமுறைக்குப் பலமுறை செவ்வையாய்ப் படித்துப்பார்த்துப் பிறகு பேசுவார்களென்று நம்புகிறோம். தவிர, உசிதமல்லாத விதண்டாவாதமான துராக்ஷேபக் சடிதங்களை வித்துவமணிகளான பத்திராதிபர் பதியாமல்விடுவதே நன்மையாகுமென்றுநினைக்கிறேம். அவைகளைப் பதிப்பதினுல் சாதுக்களுக்கு வீண்மனக்கலக்கமும் கலகாஸ்பதமுமுண்டாகுமன்றிப் ப்ரஜாநுகூலமுண்டாகமாட்டாதாகையால், அநுசிதக்கடிதமாயிருந்தபோதிலும் சந்தேகநிவிர்த்தி செய்துகொள்ள விரும்புவார்களாகில் அதைப் பதிக்கவேண்டியதுதான். வித்துவமணியாகிய பத்திராதிபர்க்கு நாம் புத்திகூறுவது பத்துப்பிள்ளை பெற்றவட்கு மலடி மருத்துவம் பார்ப்பதுபோலு மாதலின் குலிசத்தை உறையிற் பதித்துவைப்பாம். இளைப்பாறட்டும்.

சாமக்குளம், வேங்கடரமணதாஸ்.

ஆத்மபேதம் சத்தியமா?

௧. பஞ்சபூதங்களே பேதமென்றறிக. அவைகளில் வாயுவோடேயே பேதங்களொழியும். ஆகாசம் அகண்டமாகையால் அதில் பேதம் விளங்காது. ஆகவே, அதை மீறிய பரமானந்தநிலை பிராப்தமானுல் ஆத்மபேதம் விளங்க நியாயமுண்டா? இல்லை.

௨. பூதகுணங்களாகிற ஐம்பொறிகளை யடுத்திருப்பதனுல் ஆத்மபேதமுண்டாய் அந்தக்கரணமென்றும், அபிமானியென்றும், ஜீவனென்றும், தேகியென்றும் ஏற்பட்டது.

௩. ஐம்புலன்கள் அசந்தாலும் அழிந்தாலும் மிஞ்சுவது ஆத்மாவே. ஆனுல், ஐம்புலன்கள் அசந்திருக்கையில் அஞ்ஞானமுமழிந்தால் அருளுமாயாகும்.

௪. விர்த்தி, க்ஷயம் ஐம்புலன்கட்கேயன்றி ஆத்மாவுக்கில்லை.

௫. ஐம்புலன்களினுலே ஆத்மசந்நிதி அந்தக்கரணமாய்ப் பரிணமிக்கும்.

௬. ஆத்மா ஞானவடிவே.

௭. புலன்களின் தோரணையினுல் அஞ்ஞானமயமாய் அந்தக்கரணம் கற்பிதமாயிற்று. அதுவே தேகாதி ஜெகத்தாய் விளங்கும்.

௮. அஞ்ஞான மொழிந்தால் தேகாதி ஜெகத்தோற்றம் அழியும். அப்போது ஆத்மாவாய் விளங்கும்.

௯. பேதங்கட்காதாரமாயுள்ள ஐம்புலன்களின் ஒழிவே அஞ்ஞான ஒழிவாம். ஆத்மாவாகவாகும்போது அபேதந்தான் மிஞ்சும். அங்கு ஆத்மகோடிகளைக் குறிக்கச் சாதன மெது? இல்லை.

௧0. தேகோபாதியினுல் கண்டமும் உபாதியொழிவதினுல் அகண்டமும் ஏற்படும்போது அகண்டாகார விருத்தியாகிய பரமானந்தநிலையில் பேதமறிவ தெவ்வாறு?

பின்னும் வரும். ஆத்மானந்தம்.

இஃது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரெஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

௨-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஸு ஆனிமீ ௧அ-உ க்கு ௧அஅ௭ஸு ஜூன்மீ ௩௰-உ வியாழக்கிழமை. { இலக்கம்--௧

விசேஷ அறிக்கை.

கடந்த மேமீ ௩௰.உபோடு நம்பத்திரிகையின் முதல்வருஷம் பூர்த்தியாகி, இந்த ஜூன்மீ முதல் இரண்டாவதுஸு ஆரம்பிக்கப்பெற்றும், நங் கையொப்பதனர்களிற் சில கனவான்கள் சென்ற வருஷத்துப் பத்திராகிரயத்தை அனுப்ப நினையாது மிக அலக்ஷியஞ் செய்துவருகின்றார்கள். இதைக்குறித்து நாம் எத்தனையோமுறை பத்திரிகைவாயிலாக அறிக்கைசெய்தும், கார்டுகள் அனுப்பித் தெரிவித்தும் சிறிதேனும் கவனிக்காது மௌனஞ்சாதித்துவருகின்றார்கள். ஆயினும் அவர்க்கு இவ்வறிக்கையாற் றெரிவிப்பதுமன்றி, இன்னும் ஒருகார்ட்டு அனுப்புகின்றோம். இவற்றைக்கண்டபின்னரேனும் மறந்துவிடாது இதுவிஷயத்தில் சற்று ஞாபகம் வைத்து சென்ற வருடத்துப்பாக்கியையும் நிகழும் ஸுத்துத்தொகையையும் அனுப்பிவிட்டு பத்திரிகையைக்கிரமமாக ஏற்று விருத்திக்குக்கொண்டுவருமாறுவேண்டுகின்றனம்.

[illegible]

—):o:(*):o:(—

[illegible]

[illegible]

இச் "சத்வித்யா,, விற்குத் தமிழ் வருமுறை வரும்.

பத்திராதிபர் உத்தரயாத்திரை.

ஸ்ரீ ஸ்ரீங்கேரி ஜகத்குரு சங்கராசாரியசுவாமிகள் சமஸ்தானத்திலிருந்து தார்வாடாவில் நடக்கும் வித்துவத்சபைக்கு வரும்படி அனுப்பப்பட்ட தந்திச்சமாசாரத்தை யனுசரித்து, ப்ரம்மவித்தியா பத்திராதிபரால் இந்த ஜுன்மீ 10-வ முதல் ஓர் உத்தரயாத்திரைசெய்யப்பட்டது.

ஜுன்மீ 16-வ தார்வாடாவையடைந்து, மறுநாள் அவ்வூரிலேயுள்ள எல்லாவித ஜனங்களின் தன்மைகளையும் பார்த்து தேசயாத்திரையின் பிரயோசனத்தைத் தாமேகண்டு தங்களுள் மகிழ்ந்து, அவ்வூரிலுள்ள பலர் வேண்டுகோளின்படி 21-வ சாயுங்காலம் தார்வாடா நாடகசாலையில் ஓர் பெரிய உபந்நியாசம் செய்தார். அந்த உபந்நியாசம் சமஸ்கிருதபாஷையிலே செய்யப்பட்டது. சுமார் ௲ ஜனங்கள் வரையில் கூடியிருந்தார்கள். அந்த உபந்நியாசத்தில் நாஸ்திகத்திலுள்ள கெடுதியையும், ஆஸ்திகத்திலுள்ள நன்மையையும்பற்றிப் பேசப்பட்டது. அவ்வுபந்நியாசத்தை யாவரும் அறியும்படிக்கு அவ்விடம் வந்திருந்த வேதசாஸ்திரசம்பன்ன பலவந்தராவ்கேத்கே என்பவர் மகாராஷ்டிரபாஷையில் எடுத்துச்சொல்லக்கேட்டு யாவரும் வியந்தனர். உடனே அவ்வூர் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டரும், ஆபிரிக்கா முதலிய பல தேசங்களுக்குச்சென்று, அநேக மேற்றிசைப பண்டிதர்களோடு கலந்தும்பழகியவருமான, மிஸ்தர் காணேசகேப் அவர்கள் எழுந்து மிக ஆவலுடன் கன்னடத்திலும் இங்கிலீஷிலும் இந்த உபந்நியாசத்தை மிகப் புகழ்ந்து, தம் உள்ளங்குளிர வந்தனமளித்ததாகச் சொன்னார். பின் அங்கு வந்திருந்த ட்ரைனிங்காலேஜுப் பிரின்சிபல் வெங்கடரெங்ககட்டீயவர்களும், எடுகேஷனல் இன்ஸ்பெக்டர் மிஸ்தர் ரோட்டீயவர்களும் உபந்நியாசத்தை மிகப் புகழ்ந்தார்கள். உடனே சபையாரின் அனுமதிப்படி ஷிரூர் டிப்டிக்கலெக்டர் ம-௱-௱-ஸ்ரீ வெ. சா. கிருஷ்ணராவ் அவர்கள் எழுந்து பிரசங்கியாருக்கு ஜோடி சால்வை போர்த்தி, ஸ்ரீமத் ஆசாரியசுவாமிகள் சரித்திரம், அவர் சித்தாந்தங்கள், கிறிஸ்துமத ஆபாசம் முதலியவைகளைக்குறித்துச் சில உபந்நியாசங்கள் செய்யவேண்டுமெனக்கேட்டுக்கொள்ள, அங்ஙனமே 22. 23. 24. தேதிகளில் அவைகளைப்பற்றி உபந்நியசிக்கப்பட்டன. 24-வ உபந்நியாசத்திற்கு அந்த ஜில்லாவிலுள்ள சம்ஸ்கிருதபண்டிதர்களும், ஸ்ரீங்கேரி சமஸ்தானத்தின் பண்டிதருமாகச் சுமார் ௱- பேர் இருந்தார்கள். சபை மிகச்சிறப்பாக நடந்தது. மறுநாள் ஸ்ரீஜகத்குருசந்நிதானத்தில் ஆஞ்ஞையானபடி அவ்விடத்து மகாஜனங்களால் ஸ்ரீ ஜகத்குருசமஸ்தான திக்விஜய ஞாபகச்குறியாக ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ ஸ்ரீங்கேரிஜகத்குரு சங்கராசாரியசுவாமிகள் சம்ஸ்கிருதபாடசாலையின்விஷயமாய் வெகு சீக்கிரத்தில் பல விஷயங்களடங்கிய ஓர் உபந்நியாசம் நடந்து, ஸ்ரீகுருசுவாமிகளாஞ்ஞைபெற்று அவ்வுபந்நியாசம் முடிக்கப்பட்டது. பின்பு அவ்விடத்தில் இவ்வுபந்நியாசம் கேட்கும்பொருட்டே ஹுப்ளியிலிருந்து வந்தவர்களில் மிஸ்தர் பாபாதேவ்கரீ அவர்களும், ஸ்ரீ ராமதுர்சமஸ்தான ஏஜெண்டு அவர்களும் தத்தம் ஊர்களுக்கு வரும்படி கேட்டுக்கொண்டதற்கு, மற்றொருசமயம்வருவதாகவாக்களித்து 26-வ தார்வாடாவைவிட்டு நீங்கி 27-வ பல்லாரிக்கு வந்துசேர்ந்தனர்.

இன்னும் வரும்.

சிதம்பரம் ப்ரம்மவித்தயாயந்திரசாலையில் விற்கப்படும்புத்தகங்கள்.

	விலை.			தபாற்கூலி.		
சர்மிஷ்டாவிஜயம்- தெலுங்கு	,,	௬	,,	,,	,,	௬
மகேஸ்வரதண்டகம். கிரந்தம்	,,	௧	,,	,,	,,	௬
ஆரியாதண்டகம். லட்சிமிஸ்தோத்திரம் } (கிரந்தம்)	,,	௧	,,	,,	,,	௬
ஸ்ரீராமபத்திரவிஜயம். (கிரந்தம்)	,,	௮	,,	,,	௨	,,
பிரஸ்னோத்தரராமாயணம ,,	,,	௩	,,	,,	௧	,,
ஸ்தோத்திரசங்கிரகம். ,,	,,	௨	,,	,,	,,	௬
விசாகநட்சத்திரமாலிகை. ,,	,,	,,	௬	,,	,,	௬
துதிசங்கிரகம் [தேவநாகரலிபி)	,,	௧	,,	,,	,,	௬
ராமாயணவினவிடை. [தெலுங்கு]	,,	௨	,,	,,	,,	௬
பகவத்கீதார்த்த தீபிகை { கிரந்தமும்தமிழுமையும் }	௪	,,	,,	,,	௭	,,
ஆச்சரியதர்ப்பணம் { கிரந்தசுலோகம் தமிழுரையும் }	௧	௮	,,	,,	௨	,,
சங்கரசரித்திரம். [தமிழ்]	,,	,,	௬	,,	,,	௬
ஆன்மாவும்சரீரமும் ,,	,,	௧	,,	,,	,,	௬
சகாதேவசாஸ்திரம். ,,	,,	௧	,,	,,	,,	௬
கந்தபுராணநவநீதம். ,,	,,	௧௨	,,	,,	௧	,,
மாதர்நீதி. ,,	,,	௬	,,	,,	௧	,,
மனுமுறைகண்டவாசகம். ,,	,,	௪	,,	,,	,,	௬
சீர்காழிப்புராணம். ,,	,,	௮	,,	,,	௧	௬
அஷ்டாங்கயோகம். ,,	,,	௫	,,	,,	,,	௬
கிறிஸ்துமதகண்டனம். ,,	,,	௧	,,	,,	,,	௬
ஜனோபகாரம். ,,	,,	௧	,,	,,	,,	௬
சிவதத்துவவிவேகம். [கிரந்தம்]						
சாமருத்திரசங்கிதாபாஷியம் ,,	,,	௮	,,	,,	௧	,,
விசாகதுலாபாரபிரபந்தம். ,,	,,	௧	௬	,,	,,	௬

விளம்பரம்.

சென்னை, மதராஸ் ரிப்பன்பிரஸில் விற்கும் புத்தகங்கள்.

	விலை.	தபாற்கூலி.		
சர்வஜித்துவருஷத்திரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம். }	அணு	ரூ	அ	பை
	௬	,,	௧	,,
கிறிஸ்துமதகண்டனம்.	௧	,,	,,	௬
ஜனோபகாரம்.	௧	,,	,,	௬
மனுமுறைகண்டவாசகம்.	௪	,,	௧	,,
மாதர்நீதி.	௬	,,	௧	,,

ரிபுகிதை.

இப்புத்தகம் சென்னை பெத்து நாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. நெ- வீட்டில் அத்வைத விவேகசமாஜத்தி லொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2௦ விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பரம்.

இந்து மதங்களுக்குரிய புஸ்தகங்களின் மிகத் தாழ்வான விற்பனை.

புஸ்தகங்களின் பெயர்.	குறைந்த விலை.			முன்விலை.		
	ரூ	அ	ப	ரூ	அ	ப
சாந்தோக்கியோபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைதபாஷிய ஸகிதம். (தெலுங்கு)	2	6	,,	3	8	,,
வேதாந்த தீபம். ஷை	1	6	,,	2	,,	,,
யதீந்திரமத தீபிகை ஷை	,,	5	,,	,,	8	,,
பகவத்விஷயங்கள் 2-9 பத்துகள் பிரதி (தெலுங்கு) ...	4	12	,,	7	,,	,,
,, 3-5-7-10 ,, ,, ஷை ...	5	6	,,	8	,,	,,
,, 4 6 ,, ,, ஷை ...	6	4	,,	9	,,	,,
,, 8 ,, ,, ஷை ...	4	,,	,,	6	,,	,,
கிரந்த ஏழு உபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்த பாஷிய சஹிதம்.	6	12	,,	10	,,	,,
திருவாய்மொழி பிரதிபதம்.	2	11	,,	4	,,	,,
திருச்சந்த விருத்தம்	,,	2	,,	,,	4	,,

பச்சையப்ப டிரஸ்டீஸ் ஆபீஸ் பட்டணம் 1887-ஹு ஜனவரிமீ 28-உ } இ. பாலசுந்தரமுதலியார் காரியதரிசி

ப்ரஹ்மவித்யா.

பத்திரிகா கிரயம்.
ரூ அ ப
1-க்கு 1. 12. 0.
6-க்கு 1. 0. 0.
3-க்கு 0. 9. 0.
காபி 1-க்கு 0. 3. 6.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible]

உ-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்து வருஷம் ஆடிமீ ௧௦-உ க்கு ௧௮௮௭ஹு ஜூலைமீ ௨௪-உ ஞாயிற்றுக்கிழமை. { இலக்கம்-உ.

[illegible]

[illegible]

ஓர் உபந்நியாசம்.

[முன் தொடர்பு.]

இப்பொழுதும் புத்தமதஸ்தர்கள் சிங்களம், நேபாளம், திபேத்து, சீனு முதலிய தேசங்களில் மிகத் திரளாய் வசித்து வருகிறார்கள். நமது இந்துதேசத்திலே புத்தமதத்தின் பெருமை குன்றக்குன்ற முற்காலத்து ஜாதிகளும், ஆசாரங்களும் முன்னிலு மதிகக் கட்டுப்பாடுகளுடன் பிராமணர்களால் வெளியிடப்பட்டுவந்தன. அப்புத்தமதம் பரவுதற்கு முன்னரே பிராமணர்களுக்குப் பெருமை இத்தேசத்தில் நிலைபெற்றது. ஆயினும், அவர் செய்த ஜாதிக்கட்டுப்பாடுகள் நடைப்படாதுவந்தன. மனுமுதலியோர் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனப் பிரித்து நான்குஜாதிகளாகக் கூறியிருப்பினும் அவை பெயர்மாத்திரத்தில் நிற்க, புத்தமதசம்பந்தத்தாற் பல சங்கரங்கள்தொடங்கி ஜாதிபேதங்கள் பலவாய் மாறின. பிராமணஜாதி ஒன்று மட்டும் சுத்தமும் மற்றவைகள் கலப்புள்ளனவுமாயின. இப்பொழுது பல தேசங்களில் சுத்தமான க்ஷத்திரியஜாதியும் வைசியஜாதியும் லோபித்ததென்றே சொல்லலாம். பிராமணர்கள் தவிர மற்ற யாவரும் சூத்திரர்களென்றே கணக்கிடப்பட்டார்கள். இப்பொழுது இவ் விந்துதேசத்தில் சுத்தமான க்ஷத்திரியர்களும் சுத்தமான வைசியர்களுமில்லை. யாம் க்ஷத்திரியர், யாம் வைசியர் என்று சொல்லிக்கொள்பவர்களும் விசுவாமித்திரகோத்திரமென்றும், பார்க்கவகோத்திரமென்றும் சொல்லிவருகிறார்கள். அது அவ்வளவு நம்பத்தக்கதல்லவென்பது பலர் அபிப்பிராயம். இதுநிற்க; ஸ்மிருதிகளிற்சொல்லியபடி சுத்தமான சூத்திரவருணமும் இக்காலத்திற் கிடைப்பதரிதே. ஐந்தாம்வருணஸ்தனாயினும் சங்கரஜாதிகளினும் மேலானவனானதால் சூத்திரனெனவே சொல்லப்படுவான். அங்ஙனமே மனு "வருணங்களில் ஒன்றைவிட்டொன்றையடைவதாலும், மற்றொன்றிற் பெண்களைக்கொள்வதாலும், தமது ஸ்வதர்மத்தை விடுவதாலும் வருணங்களில் சங்கரமுண்டாகின்றது. பிரதிலோமத்தாலும் அநுலோமத்தாலும் பிறந்து ஒருவர்க்கொருவர் சம்பந்தமற்றுநின்ற சங்கரர்களைச்சேர